# கொரோனா வைரஸ் Coronavirus (COVID-19) நோய்த்தொற்றுக் காலத்தில் குடும்ப வன்முறை குறித்த உதவியைப் பெறுவது எப்படி

நீங்களோ, உங்களுக்குத் தெரிந்த இன்னொருவரோ உடனடி ஆபத்தில் இருந்தால் ‘000’-ஐ அழையுங்கள்

உங்களால் தொலைபேசியில் பாதுகாப்பாக அழைக்க முடியுமானால், **விக்டோரிய மாநிலத்தின் குடும்ப வன்முறை ஆதரவு சேவையான ‘safe steps’-ஐ 1800 015 188-இல் அழையுங்கள் (நாளுக்கு 24 மணி நேரம், வாரம் 7 நாட்கள்).**

உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், **‘TIS National’**-ஐ **131 450**-இல் அழைத்து **‘safe steps’** -இற்கு அல்லது இங்கு அட்டவணையிடப்பட்டுள்ள சேவைகள் எதனுடனாவது தொடர்புபடுத்தித் தருமாறு கேளுங்கள்.

## நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ வீட்டில் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறீர்களா?

கொரோனா வைரஸ் (Coronavirus (COVID-19)) பெருந்தொற்றுக் காலத்தில் உங்களுக்கு உதவியாக இருப்பதற்காகக் குடும்ப வன்முறை சேவைகள் இயக்கத்தில் இருக்கும் மற்றும் இவற்றின் உதவி உங்களுக்குக் கிடைக்கும்.

உணர்வு ரீதியான துன்புறுத்தல், நிதி-விவகாரத் துன்புறுத்தல், உடல்ரீதியான அல்லது பாலியல் ரீதியான துன்புறுத்தல் ஆகியன குடும்ப வன்முறையாகும். உங்கள் குடும்பத்திலுள்ள ஒரு நபர், அல்லது மிகவும் நெருக்கமான வாழ்க்கைத்துணைவர் ஒருவரால் செய்யப்படும் அச்சுறுத்துதலாகவோ, கட்டுப்படுத்தலாகவோ அல்லது உணர்வுரீதியான அல்லது உளரீதியான துன்புறுத்தலாகவோ இது இருக்கலாம்.

இந்த  நபர் உங்களுடைய நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கக் கூடும் அல்லது உங்களுடைய நண்பர்கள் அல்லது குடும்பத்தினரிடமிருந்து உங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டிருக்கக் கூடும். கொரோனா வைரஸ் (Coronavirus (COVID-19)) நோய்த்தொற்று ஏற்படும் அபாயத்தை அவர்கள் ஓர் அச்சுறுத்தலாக உங்கள் மீது பாவிக்கக்கூடும்.

## மற்றவர்களோடு தொடர்பில் இருங்கள் மற்றும் பாதுகாப்பிற்கான திட்டம் ஒன்றை வைத்திருங்கள்

உங்களுடைய நம்பிக்கைக்கு உரியவர்களுடன் தொடர்பில் இருங்கள், மற்றும் நெருங்கிய நண்பர்கள் அல்லது குடும்பத்தினருடன் பயன்படுத்துவதற்காக ஒரு ‘பாதுகாப்பு வார்த்தை’ (‘safe word’) அல்லது சங்கேதக் குறியைத் தெரிவு செய்துகொள்ளுங்கள். இந்த வார்த்தையை நீங்கள் பயன்படுத்தும்போது உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு காவல்துறை அல்லது அவசரகால சேவைகளை அவர்களால் அழைக்க இயலும்.

உதவியை நாடுவதற்காக நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லலாம். நீங்கள் அப்படிச் செய்தால் அதற்கு அபராதம் ஏதும் இல்லை. காவல்துறையினரால் நீங்கள் நிறுத்தப்பட்டால், வீட்டில் உங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று அவர்களுக்குச் சொல்லுங்கள், அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

இருப்பினும், வெளியேறுவதற்குத் திட்டமிடுவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் பாதுகாப்பாக

இருக்கும்போது, **1800 015 188**-இல் **‘safe steps’**-ஐ அழையுங்கள் (நாளுக்கு 24 மணி நேரம், வாரத்திற்கு 7 நாட்கள்) அல்லது safesteps@safesteps.org.au- விற்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

## உதவி நாடுங்கள்

நெருக்கடி காலத் தங்குமிட வசதி, காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய குடும்ப வன்முறை சேவைகள் கொரோனா வைரஸ் (Coronavirus (COVID-19)) நோய்த்தொற்றுக் காலத்தில் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும்.

பாதுகாப்பாக இல்லாத உணர்வு உங்களுக்கு இருந்தாலும், குழந்தைகளைப் பராமரிப்பதற்கு மேலதிக உதவி உங்களுக்குத் தேவைப்பட்டாலும், உங்களுக்கு நெருக்கமான ஒருவர் உங்களை நடத்தும் விதத்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாலும், for information about help that is available **The Orange Door** (**https://orangedoor.vic.gov.au/other-languages**) எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

குடும்ப வன்முறையைப் பற்றிய தகவல்கள் மற்றும் உதவிக்கு**1800 755 98**8-இல் ‘InTouch, Multicultural Centre Against Family Violence’ -ஐ அழையுங்கள். உங்களுக்குத் தேவைப்பட்டால், மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர்களால் ஒழுங்கு செய்ய இயலும்.

வன்முறை இழைப்பவர்களை நீதிக்கு முன் நிறுத்தவும், வன்முறைக்குப் பலியானோருக்குப் பாதுகாப்பு அளிக்கவும் ஆபத்துக்கூறுகளை அடையாளம் கண்டுத் தக்க நடவடிக்கை எடுக்க விக்டோரிய காவல்துறை (Victoria Police) இருக்கிறார்கள்.

**சமூகரீதியாகத் தனித்திருப்பது  வன்முறைக்கும், துஷ்ப்பிரயோகத்திற்கும் காரணமாக ஒருபோதும் அமையாது.** தாம் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் ‘Men’s Referral Service**’**-ஐ **1300 766 491**-இல் அழைத்து உதவியை நாடலாம். .

## முதியோர் துஷ்ப்பிரயோகம்

முதியோர் துஷ்ப்பிரயோகம் என்பது வயதில் மூத்த ஒருவருக்குத் தீங்கிழைக்கும் செயலாகும், மற்றும் இது அவர்களுக்குத் தெரிந்த, மற்றும் அவர்கள் நம்பும் ஒருவரால் - வழமையாகக் குடும்ப அங்கத்தவர் அல்லது பராமரிப்பாளர் ஒருவரால், செய்யப்படுகிறது. இந்தத் துன்புறுத்தலானது உடல்ரீதியானதாகவோ, சமூகரீதியானதாகவோ, நிதிரீதியானதாகவோ, உளரீதியானதாகவோ மற்றும்/அல்லது பாலியல் ரீதியானதாகவோ இருக்கக்கூடும், மற்றும் தவறாக நடத்தப்படுவதையும், புறக்கணிப்பையும் இது உள்ளடக்கக்கூடும். உதவிக்கு அழைக்க:

**Seniors Rights Victoria** – 1300 368 821

**Elder Rights Advocacy** – 1800 700 600

**Office of the Public Advocate** – 1300 309 337

இந்த வெளியீட்டினை அணுகக்கூடிய விதத்தில் பெற Emergency Management Communications <em.comms@dhhs.vic.gov.au>.

Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne.

© State of Victoria, Australia, Department of Health and Human Services, April 2020.

ISBN 978-1-76069-381-7 (pdf/online/MS word)

About Coronavirus (COVID-19) < https://www.dhhs.vic.gov.au/family-violence-crisis-response-and-support-during-coronavirus> எனும் வலைத்தளப் பக்கத்தில் கிடைக்கும்.

How to get family violence support during coronavirus (COVID-19) – Tamil